மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
வலங்கைமான்

**முன்னிலை :- திரு. P. ஜேசுபாலன், M. A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
வலங்கைமான்

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ம் நாள் திங்கள்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 198/2025**

**குற்ற எண். 29/2019**

**CNR No. TNTV09-000139-2025**

தமிழ்நாடு அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
வலங்கைமான் காவல் நிலையம்,
திருவாரூர் மாவட்டம். ... குற்றமுறையீட்டாளர்.

// எதிர்//

**அருண்குமார் வயது /2026**
த/பெ. கலியமூர்த்தி,
கீழத்தெரு, கோவில்பத்து
வலங்கைமான் தாலுக்கா
திருவாரூர் மாவட்டம் ... எதிரி

**2019 ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிகள், விதி 106 ன் கீழ் படியான விபரங்கள்**

| Sl. No. | Name of the Complaint | Name of the accused | Date of Arrest | Date of Release |
|---|---|---|---|---|
| (i) | State Rep. By The Inspector of Police, Valangaiman., | **Arunkumar S/o Kaliyamoorthy** | 14.01.2019 | 24.01.2019 |
| (ii) | Date of filling of | **Filing of Complainant** | **Taken on file** | |

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 12:00:36 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | the complainant/ final report in the court | 14.01.2019 | 26.09.2025 | |
| (iii) | Date of committal of the cases to the court of sessions | | Nil | |
| (iv) | Date of questioning of the accused U/s. 228, 240, 246 and 251 as the case may be | | 18.02.2026 | |
| (v) | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of the code. | **Crl.M.P.No.** | **Date of filing** | **Result** |
| | **Nil** | **Nil** | **Nil** | **Nil** |
| (vi) | Date of Examination in Chief and Cross | **Name of the Examination** | **Date of Chief** | **Date of Cross** |
| | P.W.1 | Balaji | 23.02.2026 | …. |
| | P.W.2 | Murugan | 25.03.2026 | …. |
| (vii) | Date of examination of the accused U/s. 313 of the Code | | | 26.03.2026 |
| (viii) | Details of abscondence of an accused and his appearance/Production as the case may be: | | | Nil |

| | | | | |
|---|---|---|---|---|
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | Sessions Court CMP No. | High Court No. and Date of stay | Result |
| | Nil | Nil | Nil | Nil |

| | |
|---|---|
| **குற்றச்சாட்டு** | U/s. 379 இதச ன்படி கடந்த 14.01.2019 ம் தேதி மதியம் 16.00 மணிக்கு வலங்கைமான் தாலுக்கா, கோவில்பத்து கீழத் தெருவில் வசித்துவரும் இவ்வழக்கின் புகார்தாரர் மனோகரன் என்பவர் |

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 12:00:43 +0530

| | | |
|---|---|---|
| | | கும்பகோணம் செல்ல பஸ்ஸில் காளியம்மன் கோவில் திருப்பம் அருகே சென்றுகொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் நின்ற இவ்வழக்கின் எதிரி புகார்தாரர் மனோகரனின் சட்டை பாக்கெட்டில் இருந்து 100/- ரூபாய் பணத்தை திருடிய குற்றத்திற்காக குற்றம் |
| எதிரியின் பதில்கள் | | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | | எதிரியின் மீதான 379 இதச-ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை |
| தண்டனை அல்லது உத்தரவு | | முடிவாக, எதிரி மீதான வழக்கை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கவில்லை என தீர்மானித்து, இவ்வழக்கின் எதிரி மீது சட்டபிரிவுகள் 379 இதச-ன் கீழ் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நீரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளின் கீழ் இவ்வழக்கின் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை குவிமுச 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இன்று 26.03.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை-1 திரு. இளஞ்செழியன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் பாலசந்திரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில்

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.03.30 12:00:49 +0530

இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்ததுமான இவ்வழக்கில் இன்று (30.03.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

## தீர்ப்புரை

1. அரசுத்தரப்பு வழக்கு:

அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றயிறுதி அறிக்கையில் இருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு, கடந்த 14.01.2019 ம் தேதி மதியம் 16.00 மணிக்கு வலங்கைமான் தாலுக்கா, கோவில்பத்து கீழத் தெருவில் வசித்துவரும் இவ்வழக்கின் புகார்தாரர் மனோகரன் என்பவர் கும்பகோணம் செல்ல பஸ்ஸில் காளியம்மன் கோவில் திருப்பம் அருகே சென்றுகொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் நின்ற இவ்வழக்கின் எதிரி புகார்தாரர் மனோகரனின் சட்டை பாக்கெட்டில் இருந்து 100/- ரூபாய் பணத்தை திருடி குற்றசெயல் புரிந்துள்ளார் எனவே எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 379 இதச-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட விவரம்:

குவிமுச பிரிவு 173(2) ன் கீழ் இவ்வழக்கின் குற்றயிறுதி அறிக்கை வலங்கைமான் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் கடந்த 14.01.2019-ம் தேதியன்று எதிரியின் மீது 379 இதச-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றயிறுதி அறிக்கையானது கடந்த 26.09.2025 தேதி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு குவிமுச பிரிவின் 204-ன் கீழ் எதிரிக்கு சம்மன் அனுப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 12:00:56 +0530

**3. <u>குவிமுச பிரிவு 207 ன் கீழ் நகல் வழங்கப்பட்டத்தின் விவரம் :</u>**

எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் அவருக்கு குவிமுச 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**4. <u>எதிரியின் மீது வனைப்பட்ட குற்றச்சாட்டுகளின் விவரம்:</u>**

**4.1.** எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டு, இருதரப்பு வாதங்களையும் கேட்டு, வழக்காவணங்களை பரிசீலணை செய்து, எதிரியின் மீது 379 இதச–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.2.** மேற்படி குற்றச்சாட்டுகளை எதிரியிடம் விளக்கி வினவியபோது எதிரி அவர் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்தார். எனவே அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**5. <u>அரசுத்தரப்பு சாட்சியம்:</u>**

அரசுதரப்பில் **அ.சா.1** மற்றும் **அ.சா.2** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1** மற்றும் **அ.சா.ஆ.2** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6. <u>அரசுத்தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

**6.1. அ.சா.1 பாலாஜி** தனது சாட்சியத்தில் நான் மேற்படி முகவரியில் வசித்து TV டெக்னீசியனாக தொழில் செய்து வருவதாகவும், பட்டியல் சாட்சி 1, 2 ஐ தெரியாது என்றும், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், இவ்வழக்கு பற்றி

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 12:01:04 +0530

தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காத காரணத்தினால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**6.2. அ.சா.2 முருகன்** தனது சாட்சியத்தில், தனது சாட்சியத்தில் தான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 1 இறந்துவிட்டதாகவும், பட்டியல் சாட்சி 3, அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் பிறழ் சாட்சியாக மாறிவிட்டதாகவும், பட்டியல் சாட்சி 2 உடல் நல குறைவினால் படுத்த படுக்கையாக உள்ளதாகவும், பட்டியல் சாட்சி 4 வெளிநாட்டில் வசித்து வருகிறார் என்றும், ஆனால் எந்த நாட்டில் வசித்து வருகிறார் என்று தெரியவில்லை என்றும், இவ்வழக்கின் காவல் அதிகாரி திரு. சிவகுகன் என்பவருடன் நான் பணிபுரிந்ததால் அவருடைய கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு நன்கு தெரியும் என்பதனால் இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையில் சட்டப்பிரிவு 311 குவிமுச மற்றும் ச/பி.348 BNSS ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 14.01.2019 ம் தேதி மாலை 04.30 மணியளவில் வலங்கைமான் காவல் உதவி ஆய்வாளர் திரு. சிவகுகன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது மனோகரன் என்பவரும் எதிரி அருண்குமாருடன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 12:01:14 +0530

அதன் தன்மைக்கேற்ப வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண் 29/2019 ச/பி.379 இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், புகார் மனு **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் உதவி ஆய்வாளர் அன்றைய தினமே மாலை 04.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்துள்ளார் என்றும், அவரது விசாரணையில் சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் உண்மையென்று தெரியவரவே பட்டியல் சாட்சி 1 மூலம் ஆஜர்படுத்தப்பட்ட எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், இத்துடன் அவருடைய புலன் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**7. <u>குவிமுச பிரிவு 313(1) (b) ன் படியான விசாரணை:</u>**

இவ்வழக்கில் அரசுத்தரப்பால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச 313 (b) (1) ன் கீழ் எதிரியிடம் வினவிய போது எதிரி மேற்படி சாட்சிகளின் சாட்சியம் பொய் என்று மறுத்துரைத்தார். மேலும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எதுவும் இல்லை என்று தெரிவித்தார் .

**8. <u>எதிரிகள் தரப்பு வழக்கு:</u>**

எதிரி மீது பொய்யாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றும் எதிரி தான் குற்றத்தை செய்தார் என்று நிருப்பிக்க சாட்சியம் எதுவும் இல்லை என்பது

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 12:01:22 +0530

எதிரி தரப்பு வாதமாகும். எதிரி தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை ஆவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**9. <u>தீர்வுக்குறிய பிரச்சினை:</u>**

i) எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டினை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பித்துள்ளதா?

ii) அவ்வாறு குற்றம் நிருப்பிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்கக்கூடிய தண்டனையின் விபரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வு குரிய பிரச்சினையாகும்.

**10. <u>தீர்வு:</u>**

**10.1.** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில் **அ.சா.1** மற்றும் **அ.சா.2** வரையிலான சாட்சிகளின் சாட்சியம் மற்றும் **அ.சா.ஆ.1** மற்றும் **அ.சா.ஆ.2** வரையிலான சான்றாவணங்களின் மூலம் அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிருப்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஆகையால் எதிரியை குற்றவாளி என தீர்மானித்து தக்க தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது. எதிரி தரப்பில் அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பிக்கப்படவில்லை என்றும், எதிரியை குற்றச்சம்பவத்தோடு தொடர்பு படுத்தும் விதத்தில் எவ்வித சாட்சியமும் இல்லை என்றும், எனவே, எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பு வழங்குமாறு வாதிடப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.03.30 12:01:28 +0530

**10.2.** அரசுத்தரப்பால் மேற்படி எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கும் பொருட்டு **அ.சா.1** முதல் **அ.சா.2** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.2** சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. கடந்த 14.01.2019 ம் தேதி மதியம் 16.00 மணிக்கு வலங்கைமான் தாலுக்கா, கோவில்பத்து கீழத் தெருவில் வசித்துவரும் இவ்வழக்கின் புகார்தாரர் மனோகரன் என்பவர் கும்பகோணம் செல்ல பஸ்ஸில் காளியம்மன் கோவில் திருப்பம் அருகே சென்றுகொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் நின்ற இவ்வழக்கின் எதிரி புகார்தாரர் மனோகரனின் சட்டை பாக்கெட்டில் இருந்து 100/– ரூபாய் பணத்தை திருடி குற்றசெயல் புரிந்துள்ளார் என்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**10.3.** பட்டியல் சாட்சி 1ன் இறப்பு சான்றிதழும், VAO அறிக்கையும் புலன்விசாரணை அதிகாரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் பட்டியல் சாட்சி–3 **அ.சா.1 ஆக** விசாரிக்கப்பட்டுள்ளார். **அ.சா.1** தனது முதல் விசாரணையில், "... நான் மேற்படி முகவரியில் வசித்து TV டெக்னீசியனாக தொழில் செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 1, 2 ஐ தெரியாது ஆஜர் எதிரியை தெரியாது இவ்வழக்கு பற்றி எனக்கு தெரியாது போலீசார் என்னை விசாரிக்கவில்லை......" என்று சாட்சியம் அளித்துள்ளார். சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததல் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி **அ,சா.1** அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அ.சா.1 எந்த சாட்சியமும் அரசு தரப்பு வழக்கிற்கு

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 12:01:35 +0530

பயனளிக்கும் வகையில் அளிக்கவில்லை. எனவே, **அ.சா.1** ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வித பயனும் தரவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.4. புலன்விசாரணை அதிகாரியான அ.சா.2** தனது முதல் விசாரணையில், "... நான் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 1 இறந்துவிட்டார். பட்டியல் சாட்சி 3, அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் பிறழ் சாட்சியாக மாறிவிட்டார். பட்டியல் சாட்சி 2 உடல் நல குறைவினால் படுத்த படுக்கையாக உள்ளார். பட்டியல் சாட்சி 4 வெளிநாட்டில் வசித்து வருகிறார், ஆனால் எந்த நாட்டில் வசித்து வருகிறார் என்று தெரியவில்லை. இவ்வழக்கின் காவல் அதிகாரி திரு. சிவகுகன் என்பவருடன் நான் பணிபுரிந்ததால் அவருடைய கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்பதனால் இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையில் சட்டப்பிரிவு 311 குவிமுச மற்றும் ச/பி.348 BNSS ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.01.2019 ம் தேதி மாலை 04.30 மணியளவில் வலங்கைமான் காவல் உதவி ஆய்வாளர் திரு. சிவகுகன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது மனோகரன் என்பவரும் எதிரி அருண்குமாருடன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண் 29/2019 ச/பி.379 இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். புகார் மனு **அ.த.சா.ஆ.1**

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 12:01:44 +0530

ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் உதவி ஆய்வாளர் அன்றைய தினமே மாலை 04.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்துள்ளார். அவரது விசாரணையில் சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் உண்மையென்று தெரியவரவே பட்டியல் சாட்சி 1 மூலம் ஆஜர்படுத்தப்பட்ட எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இத்துடன் அவருடைய புலன் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்....." என்று சாட்சியம்மளித்துள்ளார். **அ.சா.2** அவரது குறுக்கு விசாரணையில், "....விசாரணை அதிகாரி சொன்ன நாள் நேரத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை வழக்கு எதுவும் பதியப்படவில்லை என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி சம்பவயிடம் செல்லவில்லை என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி சொன்ன நாள் நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளிடமிருந்து எவ்வித தடயப்பொருட்களோ எவ்வித ஒப்புதல் வாக்குமூலமோ யார் முன்னிலையிலும் பெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு தேவையாண ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் படிவம் 95 மற்றும் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 12:01:54 +0530

தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கிற்கு ஆதரவாகவும் எதிரிகளுக்கு எதிராகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**10.5.** அரசு தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் எதிரி புகார்தாரரிடம் இருந்து பணத்தை திருடியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. அரசு தரப்பு வழக்கினை ஊர்ஜிதம் செய்யும் வகையில் எவ்வித சாட்சியமும் தாக்கல்செய்யப்படவில்லை மற்றும் சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. இந்நிலையில் அ.சா.2 வழக்கு பதிவு செய்து குறித்தும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும் புலன் விசாரணையை மேற்கொண்டது குறித்து சாட்சியம் அளித்திருக்கும் நிலையில் இவ்வழக்கின் சான்று பொருளான ரூபாய் 100/- எதிரியிடமிருந்து கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாதது அரசு தரப்பு வழக்கினை பலவீனப்படுத்தும் விதமாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் எதிரியை குற்றச் சம்பவத்தோடு தொடர்புபடுத்தக்கூடிய எவ்வித சாட்சியமும் அரசு தரப்பால் இந்நீதிமன்றத்தில் முன்னிருத்தப்படவில்லை. எனவே, எதிரி மீதான குற்றச்செயல்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை. என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசு தரப்பில் வழக்கில் எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிக்கு வழங்குவதே நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11. முடிவு:**

முடிவாக, எதிரி மீதான வழக்கை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 12:02:04 +0530

நிருபிக்கவில்லை என தீர்மானித்து, இவ்வழக்கின் எதிரி மீது சட்டபிரிவுகள் 379 இதச–ன் கீழ் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நீரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளின் கீழ் இவ்வழக்கின் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை குவிமுச 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப்பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் தேதி திங்கள்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 12:02:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்

**இணைப்பு**

**சாட்சிகளின் விபரம்**

**அரசுதரப்பு சாட்சிகள்**

| **தரவரிசை** | **பெயர்** | **வகை** |
|---|---|---|
| அ.சா.1 | பாலாஜி | |
| அ.சா.2 | முருகன் | புலன் விசாரணை அதிகாரி |

**எதிரிகள் தரப்பு சாட்சி – இல்லை**
**நீதிமன்ற சாட்சி – இல்லை**

**<u>சான்றாவணங்களின் விபரம்</u>**

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| **வ.எண்** | **சான்றாவண எண்.** | **விபரம்** |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ. 1/அ.சா. 2 | புகார் மனு |
| 2. | அ.த.சா.ஆ.2/அ.சா.4 | முதல் தகவல் அறிக்கை |

**எதிரி தரப்பு சான்றாவணம் –இல்லை**
**நீதிமன்ற சான்றாவணம் – இல்லை**

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.03.30 12:02:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்

**<u>தீர்ப்புரையின் நகல் :</u>**

1. மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

**<u>குறிப்பு</u>**

1. இவ்வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்ற விசாரணையின் போது பிணையில் இருந்தனர்.
3. சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.